மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 66/2019 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | மாரியம்மாள் | நாள் | 20.01.2025 |
| கணவர் பெயர் | பாலகிருஷ்ணன் | | |

**வாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

5) என் தந்தை மாரிமுத்துவிற்கு பூர்வீகமாக எவ்வளவு நிலம் பாத்தியப்பட்டுள்ளது என்றால், அது குறித்து எனக்கு சரியாக தெரியவில்லை. அதேபோல் எந்தெந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என எனக்கு தெரியுமா என்றால், படிப்பறிவு இல்லாததால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. என் தந்தை தனக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் எவ்வளவு நிலத்தை விற்பனை செய்துள்ளார் என்பது குறித்தும், எவ்வளவு நிலத்தை கைவசம் வைத்துள்ளார் என்பது குறித்தும் எனக்கு தெரியுமா என்றால், எந்த நிலத்தையும் விற்கவில்லை.

6) என் தந்தை 1964ம் வருடத்தில் தனக்கு பிறந்திருந்த தன் ஆண் வாரிசுகளுடன் தன் குடும்ப சொத்துக்களை பாகபிரிவினை செய்துள்ளார் என்றால், சரியல்ல. நான் சொல்வது தவறானது என்றாலும் 1964ம் வருடத்தில் என் தந்தைக்கும், அவரது ஆண் வாரிசுகளுக்கும் இடையே பதிவுசெய்யப்பட்ட பாகபிரிவினை ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

7) மேற்படி ஆவணத்தின்படி என் தந்தை மாரிமுத்துகவுண்டர் மற்றும் அவரது ஆண் வாரிசுகளான வைத்தியலிங்கம், அங்கமுத்து, நாராயணன், சின்னையன் ஆகியோர் சேர்ந்து பாகபிரிவினை செய்துள்ளனர் என்றால், மேற்படி சொத்து என் பாட்டனாருடைய சொத்து. அது குறித்து பொய்யாக ஆவணம் ஏற்படுத்தியுள்ளனர். மேற்படி பாகபிரிவினை ஆவணத்திலேயே அங்கமுத்து, நாராயணன், சின்னையன் ஆகியோர்களுக்கு என் தந்தையின் இரண்டாவது மனைவி சின்னப்பாப்பாள் என்பவரை பாதுகாவலராக நியமித்து, மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

8) தாவா சொத்து என் பாட்டனார் வழி பூர்வீக சொத்து என நான் சொல்லும் நிலையில், 06.06.1964 ம் தேதிய பாகபிரிவினை ஆவணம் செல்லாதது என கூறி, இதுவரை என் தரப்பில் ஏதேனும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால், இல்லை. மேற்படி 1964 ம் வருட பாகபிரிவினை ஆவணத்தில் என்ன சங்கதிகள் சொல்லப்பட்டுள்ளது என நான் தெரிந்துகொண்டேனா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது.

(வாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.